Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 114

வெள்ளிக்கிழமை
20 மார்ச் 2026

பங்குனி 06 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் –12
விலை – ரூபா 50

ஆசியப் பிராந்தியத்துக்கான

## அமெ. சிறப்புத் தூதர் இலங்கைக்கு வருகை

கொழும்பு, மார்ச் 20
தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்கச் சிறப்புத் தூதுவர் செர்ஜியோ கோர், இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ளார்.
ஜனாதிபதி அநுர, பிரதமர் ஹரிணி, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரு »11

கறுப்புக்கொடி விவகாரம்

## பல்கலை மாணவர்களிடம் நேற்றுத் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச் 20
சுதந்திரதினத்தன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் தேசியக் கொடி கீழிறக்கப்பட்டு, அதற்குப் பதிலாகக் கறுப்புக்கொடி ஏற்றப்பட்ட விவகாரத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களிடம் நேற்று விசாரணைகள் முன்னெடுக் »11



கறுப்புக்கொடி விவகாரம்

# விசாரணைகளை எதிர்த்து பல்கலையில் போராட்டம்!

**யாழ்ப்பாணம், மார்ச் 20**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிரான பொலிஸ் விசாரணைகளைக் கண்டித்து, பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரைகளைப் புறக்கணித்து நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.** »11

வேலணைப் பகுதிகளில்

## 90, 91களில் கொலையுண்ட மக்களுக்கு நினைவுத்தூபி

யாழ்ப்பாணம், மார்ச் 20
வேலணைப் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் 1990, 1991ஆம் ஆண்டுகளில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களுக்காக நினைவுத்தூபியொன்றை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
வேலணைப்பிரதேசசபையின் »11

வலுசக்தி அமைச்சர் மீது

## நம்பிக்கையில்லாப் பிரேரணை ஏப்ரல் 10ஆம் திகதி விவாதம்

கொழும்பு, மார்ச் 20
வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக, சபாநாயகரிடம் நேற்று நம்பிக்கையில்லாப் பிரேரணை வழங்கப்பட்டுள்ளது. அந்தப் பிரேரணை விவாதத்துக்கு விடவும், வாக்கெடுப்பு நடத்தவும் சபாநாயகர் தீர்மானித்துள்ளார்.
நாட்டில் தற் »11

## எரிபொருள் இருப்பு மேலும் அதிகரிப்பு!

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 20
நாட்டின் எரிபொருள் கையிருப்பு மேலும் அதிகரித்துள்ளது. இதன்படி, ஏப்ரல் மாத இறுதிவரை தற்போது எரிபொருள் கையிருப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.
பெற்றோலியக் கூட்டுத்தா »11

## தடையில்லா எரிபொருள்: கட்டார் உறுதிப்படுத்தும்

ஜனாதிபதி அநுரகுமாரவிடம் மன்னர் அல் தானி வாக்குறுதி



கொழும்பு, மார்ச் 20
மத்திய கிழக்கில் போர்ச் சூழல் விரிவடைந்தாலும், தடையில்லா எரிபொருள் விநியோகத்தை கட்டார் நிச்சயம் உறுதிப்படுத்தும் என்று கட்டார் மன்னர் ஹமாத் அல் தானி தெரிவித்துள்ளார்.
மத்திய கிழக்கில் நிலவும் போர்ப் பதற்றம் தொடர் »11

## சிங்கள மக்களின் உரிமைகள் வடக்கில் பறிக்கப்படுகிறதாம்

யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பேரணி

யாழ்ப்பாணம், மார்ச் 20
வடக்கு மாகாணத்தில் சிங்கள மக்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தி, யாழ்ப்பாணத்தில் »11

## இராணுவப் பாதுகாப்பில் எரிபொருள் நிலையங்கள்

விரிவு பக்கம்:- 11



முச்சந்தி முரளி

"உதையும் அவர் தன்ர பப்ளிசிட்டிக்குப் பாவிச்சு இன்னும் நல்லா வெளிநாட்டில இருந்து வறுகுவார் கண்டியளோ"

இரணைமடு விவசாயிகளால்

## அர்ச்சுனா எம்.பி.யின் கொடும்பாவி எரிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 20
நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கு எதிராக நேற்றுப் போராட்டத்தை முன்னெடுத்த இரணைமடு விவசாயிகள் அவரின் கொடும்பாவியையும் எரித்தனர்.
இரணைமடு கமக்காரர் அமைப்பு »11



நிகழ்நிலைச் சட்டத்தின் கீழ்

## அர்ச்சுனா எம்.பி. மீது மருத்துவரால் வழக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 20
தெல்லிப்பழைப் புற்றுநோய் பிரிவு மருத்துவ நிபுணர் ஒருவர், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவுக்கும் இன்னும் சில தரப்புகளுக்கும் எதிராக, நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.
தன்னைத் தொந்தரவு செய்யும் வகை »11

கட்டுப்பாட்டை இழந்து

## மரத்துடன் மோதுண்டு மோ.சைக்கிள் விபத்து

ஒருவர் உயிரிழப்பு முல்லைத்தீவில் பரிதாபம்

முல்லைத்தீவு, மார்ச் 20
முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார்சைக்கிள், வீதியோரமாக நின்ற மரத்துடன் மோதுண்டதில் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்தார்.
புதுக்குடியிருப்பு - கோம்பாவில் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபரே உயிரிழந்த »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 19.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4380 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 28 36 64 73 |
| விசேட எழுத்து | I |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 19.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1447 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 01 28 38 61 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 19.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0406 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 3 8 7 9 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 19.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2486 |
| ஆங்கில எழுத்து | M |
| சுப்பர் இலக்கம் | 05 |
| வெற்றி இலக்கங்கள் | 32 44 64 74 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 19.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6138 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 6 7 8 7 9 0 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 19.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2168 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 09 28 53 60 |
| விசேட எழுத்து | T |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 19.03.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0254 |
| வெற்றி இலக்கினம் | கன்னி |
| வெற்றி இலக்கங்கள் | 04 05 17 |

# நிலக்கரி மின் உற்பத்தி நுரைச்சோலையில் வீழ்ச்சி!

## மத்திய வங்கித் தரவுகள் சுட்டிக்காட்டு

**கொழும்பு, மார்ச் 20**

**நுரைச்சோலையில் நிலக்கரி மூலமான மின் விநியோகம் கடந்த இரண்டு வாரங்களில் கணிசமாகக் குறைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் நாளாந்த பொருளாதாரக் குறிகாட்டி அறிக்கைகள் உறுதிப்படுத்தியுள்ளன.**

தரமற்ற நிலக்கரிப் பயன்பாடு காரணமாக நுரைச்சோலை மின்நிலையத்தின் மின் உற்பத்தித்திறன்வீழ்ச்சியடைந்துள்ளது என எழுந்துள்ள சர்ச்சைக்குரிய பின்னணியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின்படி, கடந்த மார்ச் 3 ஆம் திகதி நிலக்கரி எரிப்பு மூலம் 34.2 ஜிகாவோட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டது. எனினும், கடந்த 17ஆம் திகதி அந்த அளவு 26.2 ஜிகாவோட் ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. நிலக்கரி மின்சாரத்தில் ஏற்பட்ட இடைவெளியை நிரப்ப, டீசல் மூலமான மின் உற்பத்தி 18.7 ஜிகாவோட்டில் இருந்து 26 ஜிகாவோட் ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தரமற்ற நிலக்கரி காரணமாக இயந்திரங்களின் செயற்பாடு பாதிக்கப்பட்டுள்ளதே இதற்குப் பிரதான காரணம் எனக் கூறப்படுகிறது. நாட்டில் ஏற்கனவே கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு நிலவும் சூழலில், மின் உற்பத்திக்காக அதிகளவிலான டீசலைப் பயன்படுத்துவது நெருக்கடியைத் தோற்றுவிக்கும் என மின்சாரத்துறை நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இது தொடர்ச்சியான மின் விநியோகத்தைப் பாதிப்பதுடன், மின் உற்பத்திச் செலவையும் பன்மடங்கு அதிகரிக்கும் என்றும் கூறப்படுகின்றது. (ச-இ)

## சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 19.03.2026 | வியாழக்கிழமை | 0846 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| U | 8 8 0 4 7 0 |

## Super Ball DLB

| திகதி | தினம் |
|---|---|
| 19.03.2026 | வியாழக்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 3112 | S | 15 48 76 79 |

## சனிதா DLB

| திகதி | தினம் |
|---|---|
| 19.03.2026 | வியாழக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| Y | 17 22 63 70 | 5273 |

## SASIRI DLB

| திகதி | தினம் |
|---|---|
| 19.03.2026 | வியாழக்கிழமை |

| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|
| 0942 | 04 22 43 |

## லக்ன ராசி DLB

| திகதி | தினம் |
|---|---|
| 19.03.2026 | வியாழக்கிழமை |

| மகரம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 18 20 32 38 | 4824 |

## KAPRUKA DLB

| திகதி | தினம் |
|---|---|
| 19.03.2026 | வியாழக்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| T | 38 | 03 27 37 64 | 2288 |

## அத கோடிபதி DLB

| திகதி | தினம் |
|---|---|
| 19.03.2026 | வியாழக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| B | 20 39 67 72 | 2938 |

# இலங்கையில் வருடாந்தம் 9,500 பேர் காச நோயாளர்!

கொழும்பு, மார்ச் 20

இலங்கையில் ஆண்டுதோறும் சுமார் 8,500 முதல் 9,500 வரையான புதிய நோயாளிகள் அடையாளம் காணப்படுகின்றனர் என்று சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் தேசிய திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் பிரமிதா சாந்திலதா தெரிவித்துள்ளதாவது-

இலங்கையில் பதிவாகும் நோயாளிகளில் 45 சதவீதமானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர். கடந்த ஆண்டில் மட்டும் 8,726 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 93% பேர் முதல்முறையாகப் பாதிப்புக்குள்ளானவர்கள். 75% பேருக்கு நுரையீரலில் காசநோய் ஏற்பட்டுள்ளது. சுமார் 5,500 பேர் மற்றவர்களுக்கு நோயைப் பரப்பக்கூடிய நிலையில் உள்ளனர். காசநோய் முக்கியமாகச் சுவாசப்பாதை வழியாகவே பரவுகிறது. நோயாளி ஒருவர் இருமும்போது, தும்மும்போது அல்லது பலமாகச் சிரிக்கும்போது வெளியேறும் பக்றீரியாக்கள் மூலம் மற்றவர்களுக்குப் பரவுகிறது. இது ஆரம்பத்தில் நுரையீரலைப் பாதித்தாலும், பின்னர் உடலின் ஏனைய பாகங்களுக்கும் பரவக்கூடியது. நோய் தீவிரமடைவதற்கு முன்னரே சரியான பரிசோதனைகள் மூலம் நோயாளிகளைக் கண்டறிந்து சிகிச்சையளிப்பதன் மூலம் மரணங்களைத் தவிர்க்க முடியும்- என்றார். (ச-இ)

# இணையவழி மோசடிகள்; தடுக்க சீனா கைகோர்ப்பு

தொலைத்தொடர்பு மற்றும் இணையவழி மோசடிகளை ஒடுக்குவதில் இலங்கையுடனான சட்ட அமுலாக்க ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதாக சீனா உறுதியளித்துள்ளது.

இலங்கையின் மேம்பட்ட தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பு, மூலோபாய ரீதியிலான புவியியல் இருப்பிடம், ஒப்பீட்டளவில் தளர்வான விசாக் கொள்கைகள் மற்றும் மக்களின் விருந்தோம்பல் ஆகியவை நாடு கடந்த மோசடிக் குழுக்களுக்கு இலங்கையை ஒரு இலக்காக மாற்றியுள்ளன. இதன் விளைவாக, இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகள் இலங்கையில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன. எல்லை தாண்டிய குற்றங்களைக் கையாள்வதில் கூட்டு விசாரணைகள் மற்றும் ஒருங்கிணைப்பை மேலும் மேம்படுத்தத் தயாராக இருப்பதாகவும் சீனா தெரிவித்துள்ளது. (ச-இ)




# புத்தாண்டுக்கு முன்பு உ/த பெறுபேறுகள்

கொழும்பு,மார்ச் 20

எதிர்வரும் சிங்கள மற்றும் தமிழ்ப் புத்தாண்டுக்கு முன்னதாக 2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படும் எனப் பரீட்சை ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே தெரிவித்துள்ளார்.

பெறுபேறுகளை வெளியிடுவதற்கான அத்தியாவசிய நடவடிக்கைகள் தற்போது நிறைவடையும் தருணத்தில் உள்ளன. மேலும், கல்விப் பொதுத் தராதர சாதாரணதப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சாதாரணதரப் பரீட்சைக்கான செய்முறைப் பரீட்சைகள் ஏப்ரல் மாதத்தின் பிற்பகுதியில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன. இதன்படி, செய்முறைப் பரீட்சைகள் நிறைவடைந்தவுடன் சாதாரணதரப் பெறுபேறுகளை விரைவில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

# கியூ.ஆர். சிக்கலைத் தீர்க்க புதிய 'ஓவர்ரைட்' வசதி!

கொழும்பு, மார்ச் 20

எரிபொருள் கியூ.ஆர். குறியீடுகளைப் பெறுவதில் பொது மக்கள் எதிர்நோக்கும் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக 'ஓவர்ரைட்' (Override) எனும் புதிய வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம், ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட தகவல்களில் உள்ள பிழைகளைத் திருத்தி, புதிய முறையில் எரிபொருள் கியூ.ஆர். குறியீட்டைப் பெற்றுக்கொள்ளமுடியும். இந்த வசதியால் பயநர்கள் தமது முந்தைய பதிவுகளை முழுமையாக நீக்கிவிட்டு புதிதாகப் பதிவுசெய்துகொள்ள முடியும். ஒரு வாகனம் ஏற்கனவே வேறொரு தொலைபேசி இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், தற்போது சரியான வாகன விவரங்கள் மற்றும் செசி இலக்கத்தை (Chassis Number) வழங்குவதன் மூலம் புதிய தொலைபேசி இலக்கத்தின் கீழ் கியூ.ஆர். குறியீட்டைப் பெற்றுக்கொள்ளலாம். இந்தப் புதிய வசதியைப் பயன்படுத்தும் போது வாகனத்தின் துல்லியமான விபரங்களை வழங்குவது அவசியமாகும்.

தவறான தொலைபேசி இலக்கங்கள் அல்லது தரவுப் பிழைகள் காரணமாக எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியாமல் இருந்த வாகன உரிமையாளர்களுக்கு இந்த 'ஓவர்ரைட்' வசதி பெரும் நிவாரணமாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எரிபொருள் நிலையங்கள் விதி மீறினால் நடவடிக்கை

## முறையிட அலைபேசி எண்கள்

**கொழும்பு, மார்ச் 20**
**எரிபொருள் விநியோகம் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அரச அறிவுறுத்தல்களை மீறிச்செயற்படும் எரிபொருள் நிலைய உரிமையாளர்களுக்கு எதிராகக் கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எச்சரித்துள்ளது.**

அதன்படி எரிபொருள் நிலையங்களில் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட எரிபொருள் ஒதுக்கீட்டை மீறி விநியோகித்தல், எரிபொருள் இருப்பினை மறைத்து வைத்து விற்பனை செய்ய மறுத்தல், மேலதிக விலைக்கு எரிபொருளை விற்பனை செய்தல், வரிசைகளில் முறைகேடுகளை அனுமதித்தல் என்பன நிகழ்ந்தால் முறையிடலாம்.

இத்தகைய சட்டவிரோதச் செயற்பாடுகள் குறித்து 011 2106767, 011 7296130 என்ற இலக்கங்களுக்குத் தொடர்புகொண்டு அறிவிக்கலாம்.

முறைப்பாடுகள் உறுதிசெய்யப்படும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட எரிபொருள் நிலையங்களின் விநியோக அனுமதிப்பத்திரத்தை இரத்துச்செய்யவும், அவர்களுக்கு எதிராக வழக்குகளைத் தாக்கல்செய்யவும்கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது. (ச-



## கச்சா எண்ணெய் விலை அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 20
உலகின் மிகப்பெரிய இயற்கை எரிவாயு வயல்களில் ஒன்றான ஈரானின் 'தெற்கு பார்ஸ்' எரிசக்தி நிலையங்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்களைத் தொடர்ந்து, ஆசிய சந்தையில் கச்சா எண்ணெயின் விலையானது 4 வீதத்தால் அதிகரித்துள்ளது. பிரெண்ட் (Brent) வகை கச்சா எண்ணெய் ஒரு பீப்பாயின் விலை 112 அமெரிக்க டொலர் வரை உயர்ந்துள்ளது. அதே வேளை, அமெரிக்க சந்தையிலும் கச்சா எண்ணெயின் விலை 3 வீதத்தால் அதிகரித்துள்ளதுடன், ஒரு பீப்பாயின் விலை 99.27 டொலராகப் பதிவாகியுள்ளது. இதேவேளை, ஏற்பட்டுள்ள எரிசக்தி நெருக்கடி காரணமாக நேற்றுக் காலை ஆசியாவின் முக்கியமான பங்குச் சந்தைகள் வீழ்ச்சியடைந்திருந்தன. (எ-இ)

## 600 லீற்றர் பெற்றோலை பதுக்கிய வர்த்தகர் கைது

பொலநறுவை, மார்ச் 20
சட்டவிரோதமான முறையில் 604 லீற்றர் பெற்றோலைச் சேகரித்து வைத்திருந்த வர்த்தகர் ஒருவர் பொலநறுவை, மீகஸ்வெவப் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார். சில்லறை விற்பனை நிலையம் ஒன்றை நடத்தி வந்த 70 வயதுடையவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த தகவலின் பேரில் இந்தச் சோதனை நடவடிக்கைமுன்னெடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## எரிபொருள் பதுக்கிய இளைஞர் கைது!

கொழும்பு, மார்ச் 20
வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹெந்தல பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் எரிபொருளைச் சேமித்து வைத்திருந்த 18 வயதுடைய இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 240 லீற்றர் டீசல் மற்றும் 5 லீற்றர் பெற்றோல் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ச-இ)



## டுபாய்க்கான விமானசேவைகள் இரத்து

கொழும்பு,மார்ச் 20
டுபாய்க்கான விமானசேவைகள் நேற்றும் இன்றும் இரத்துச்செய்யப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அறிவித்துள்ளது. மேலும் தமாம், டோஹா, குவைத் ஆகிய நாடுகளுக்கான விமான சேவைகள் எதிர்வரும் 28ஆம் திகதி வரை இரத்துச்செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயணங்களுக்கான முன் பதிவுகளைச் செய்தவர்கள் தங்களின் போக்குவரத்துத் தொடர்பில் 1979 எனும் துரித தொலைபேசி எண்ணுக்குத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## எரிபொருள் பதுக்கல்கள்: சுற்றிவளைப்பு தீவிரம்!

### பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு,மார்ச் 20
இலங்கை எதிர்நோக்கியுள்ள அசாதாரண சூழலைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் சட்டவிரோதச் செயல்களைக் கட்டுப்படுத்தப் பொலிஸார் சுற்றிவளைப்புகளை ஆரம்பித்துள்ளனர். இதுகுறித்து உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு. வுட்லர் தெரிவிக்கையில், எரிபொருளைச் சட்டவிரோதமாகச் சேமித்து வைத்திருந்த நபர்களுக்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் விசேட சோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சமூக விரோதப் போக்கில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகப் பொலிஸார் சமரசமின்றி நடவடிக்கை எடுப்பர். சட்டத்தை மதிக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் கடமையாகும். சட்டத்தை நிலைநாட்டப் பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் – என்றார். (ச-இ)

## பள்ளிக்கூடங்களும் பைபிளும்– I

**வேலியிலகிடந்தஓணானை எடுத்துவேட்டிக்குள்ள விட்ட கதைமாதிரி, பைபிளைக் குடுக்க பெர்மிசன் குடுத்த பிரச்சினையால வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களம் கலகலத்துப் போய்க் கிடக்குதாம். இதைப்பற்றிச் சொல்ல முதல் கொஞ்சநாளைக்கு முதல் நடந்த இன்னொரு சம்பவத்தைப் பற்றியும் சொல்லோணும். அப்பதான் உந்த அதிகாரிமார் எப்பிடியெல்லாம் ஆக்களுக்கு ஏத்தமாதிரி தாளத்தை மாத்தி மாத் திப் போடுகினம் எண்டு எல்லாருக்கும் தெரியவரும்.**

**ஒரு சமூகசேவை அமைப்பொண்டு பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கு பொதுவான, அறிவூட்டக்கூடிய புத்தகங்களைக் குடுக்கிறதுக்காக வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தில இருக்கிற 'மேலதிக' பெரியவரைப் போய் பெர்மிசன் கேட்டிருக்கினம். அவ்வளவுதான், ஏதோ ஊத்தையை உழக்கின உஞ்சு மாதிரி பதறியடிச்சுக் கொண்டு 'அப்பிடியெல்லாம் குடுக்கேலாது. எங்கட பாடத்திட்டத்தில இருக்கிற, அரசாங்கம் தாற புத்தகங்களைத்தான் குடுக்கலாம். வெளியாக்கள் குடுக்கிற தெண்டால் வெளியில ஏதும் நிகழ்வில குடுங்கோ' எண்டு முகத்தில அடிச்சமாதிரிச் சொல்லிக் கலைச்சுப் போட்டார். அப்பிடிக் கடமையே கண்ணா நினைக்கிற அந்த 'மேலதிக' அதிகாரிதான், பைபிளைப் பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கு குடுக்கப்போறம் எண்டு சொல்ல வாயெல்லாம் பல்லாகி, கண்ணை மூடிக்கொண்டு பெர்மிசன் குடுத்திட்டார். அறிவார்ந்த புத்தகங்களைக் குடுக்கக் கூடாது எண்டு சொன்னவர் பைபிளைக் குடுக்கச் ஓமெண்டதுக்கு என்ன காரணம் எண்டு கனக்க மினக்கெடத் தேவையில்லை. எல்லாம் மதப்பற்றுத்தான். இதே அதிகாரி, வலயக்கல்விப்பணிப்பாளரா இருக்கேக்க, அந்த ஒப்பீஸில இருந்த சைவசமயச் சாமிப்படங்களை எல்லாம் வெளியில தூக்கி எறிஞ்சவர். பிறகு அதுக்கு எதிர்ப்பு வந்தவுடன, ஆருமே நம்பேலாத அளவுக்கு ஏதேதே உருட்டிச் சமாளிச்சவர். அவருக்குள்ள எப்பவும் இருக்கிற அதே மதப்பற்றுத்தான் இந்த பைபிள் விசயத்திலையும் விளையாடியிருக்குது.**

**பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கு பைபிள் குடுக்கிறதில என்ன பிழை இருக்கெண்டு ஆரும் கேக்கலாம். பைபிள் எண்டது ஒரு பாடப்புத்தகமோ, ஒரு அறிவை வளர்க்கிற புத்தகமோ இல்லை. அது ஒரு சமயத்தின்ர புனித நூல். அதால எல்லாக் கிறிஸ்தவ ஆக்களின்ர வீடுகளிலையும் கட்டாயம் பைபிள் இருக்கும். அதை அங்க உள்ள பிள்ளையளும் படிச்சிருப்பினம். வீட்டுக்காரரும் பைபிளை வாசிச்சு அதில உள்ள விசயங்களைச் சொல்லிக் குடுத்திருப்பினம். அப்பிடி வீட்டில பைபிள் இருக்கிற கிறிஸ்தவப் பிள்ளையளுக்கு என்னத்துக்காக இன்னொருக்கா இவையள் பைபிளைக் குடுக்கோனும்? அப்ப உந்த பைபிளைக் குடுக்கிற நோக்கமே, மற்ற மதப் பிள்ளையளிட்ட திணிக்கிறதுதான். இப்பிடித்தான் அந்த சபை, இந்த சபை எண்டுகொண்டு ஆயிரத்தெட்டு மத மாற்ற அமைப்புகள், வீடு வீடாப்போய் நோட்டீஸ், புத்தகம் எண்டு குடுத்து ஆக்களை மதம் மாத்துறவை. அப்பிடி ஒரு விளையாட்டுக்குத்தான் இந்தச் சபையும் வெளிக்கிட்டு, மூக்குடைபட்டிருக்குது. தங்கட கூட்டுச்சதி பிடிபட்டுப் போட்டுது எண்ட பதற்றத்தில தான் முதல் குடுத்த அனுமதிக்கடிதத்துக்கு மேலதிகமா எழுதின இன்னொரு கடிதத்தில அந்த 'மேலதிக'அதிகாரி மண்டைக்கு மேல இருந்த கொண்டையை மறந்து மாட்டுப்பட்டுப் போனார். அப்பிடி என்ன எழுதினவர்? என்னெண்டு மாட்டுப்பட்டவர்? எண்டதை நாளைக்குப் பாப்பம்.**

padsi@uthayan.com –பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சனிப்பெயர்ச்சிப் பலன்

உங்கள் ராசிக்கு, வாக்கியப் பஞ்சாங்கப்படி 9ஆம் வீட்டில் ஆட்சி பெற்று வலுவாக அமர்கிறார் சனிபகவான். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும் காலம் இது. சவால்களில் வெற்றி பெறுவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு அதிகரிக்கும்.

குடும்பத்தில் நல்லது நடக்கும். தம்பதிக்கு இடையே கருத்து வேறுபாடுகள் மறையும். சிலருக்குச் சொந்தவீடு வாங்கும் பாக்கியம் உண்டு. பழைய கடனை அடைக்க, புது வழி பிறக்கும். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பங்காளிப் பிரச்சினைகள் தீரும். வசதியான வீட்டுக்கு மாறுவீர்கள். பிள்ளைகள்வழியில், மகனுக்கு அயல்நாட்டுத் தொடர்புடைய நிறுவனத்தில் வேலை கிடைக்கும். மகளுக்கு நல்ல வரன் அமையும். சொந்தங்கள் மெச்சும்படி கல்யாணத்தை முடிப்பீர்கள்.



## கடகம்

அதேபோல் சனிபகவான் வரும் ஏப்ரல் 2ஆம் திகதி வரை பூரட்டாதியில் சஞ்சரிக்கிறார். பணப்புழக்கம் அதிகரிக்கும். விலை யுயர்ந்த ஆபரணங்களை வாங்குவீர்கள். மகனுக்குத் திருமணத் தடை நீங்கும். வீடு கட்ட வங்கிக் கடனுதவி கிடைக்கும்.

சனிபகவான் உத்திரட்டாதியில் பயணிக்கும் காலமான 2.4.2026 முதல் 14.4.2027 வரை வீண் அலைச்சல், விரயச் செலவுகள் வரக்கூடும். கவனம் தேவை. குடும்பத்தில் சிறிய பிரச்சினைகளைப் பெரிதுப்படுத்தவேண்டாம். வழக்குகளில் கவனம் தேவை.

அதேநேரம், இந்த வருடத்தின் நிறைவில் சனி வக்ரத்தில் செல்வதால், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். நண்பர்களால ஆதாயம் உண்டு.

சனிபகவான் 14.4.2027 முதல் 24.4.2028 வரை ரேவதியில் செல்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் தடைப்பட்டிருந்த வீடுகட்டும் பணிகளை முழுமையாக முடிப்பீர்கள். புது முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

இந்தச் சனிப்பெயர்ச்சிக் காலத்தில் மீனத்தில் அமரும் சனீஸ்வரர், உங்கள் ராசிக்கு 3, 6 மற்றும் 11ஆம் வீட்டைப் பார்ப்பதால், திட்டமிட்டபடி வேலைகளை முடிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். உடல் ஆரோக்கியம் நிம்மதி தரும். எதிர்பாராத பணவரவுகள் உண்டு. புதுச் சொத்து வாங்குவீர்கள்.

இந்த ராசியைச் சேர்ந்த பெண்களுக்கு முன்னேற்றம் உண்டாகும். அடகில் வைத்திருந்த தங்கத்தை மீட்டெடுப்பீர்கள். பிள்ளைகளால்பெருமை அடைவீர்கள்.

வியாபாரத்தில் சந்தை நிலைவரம் அறிந்து கொள்முதல் செய்வது அவசியம். பாக்கிகளெல்லாம் இனி தானாக வந்துசேரும். சிலர், கடையை வேறிடத்திற்கு மாற்றுவார்கள். பங்குதாரர்களிடையே மனக்கசப்புகள் விலகும். புது ஏஜென்ஸி எடுப்பீர்கள். கெமிக்கல், இரும்பு, பாரம்பரிய உணவு வகைகளால் இலாபம் உண்டு.

உத்தியோகஸ்தர்களுக்கு, உங்களைப் புரிந்து கொள்ளும் புதிய அதிகாரி வருவார். அலுவலகத்தில் உங்கள் கை ஓங்கும். எதிர்பார்த்த சம்பள உயர்வு, சலுகைகள் கிடைக்கும். கணினித் துறையினருக்கு, வெளிநாட்டுத் தொடர்புடைய நிறுவனங்களில் வாய்ப்புக்




## ஆன்மிக எதிர்நீச்சலடிப்போம்

"நான் நன்றாக வாழ்வதற்கு என்ன வழி?" என்று கேட்டவரிடம் ஒரு அனுபவசாலி விழிப்புணர்வு நிலை ஒன்றே போதும் என்று கூறினார். சிறப்பாக வாழ்வதற்கான வழிகளை எத்தனையோ வழிகாட்டிகள் வாழ்வில் எடுத்துரைத்து செயற்படுத்திச் சென்றுள்ளார்கள். இயேசுவின் வாழ்வும் போதனைகளும் விழிப்பூட்டல்களையும், நிம்மதியையும், வாழ்க்கைத் தத்துவங்களையும் விட்டுச் சென்றுள்ளன. இயேசுவுக்கு எதிராகத் தீட்டப்பட்ட சதி வலைகளுக்குள் அவர் சிக்கிக்கொள்ளவில்லை. தடம் புரண்டு பாதை தவறிப் பயணித்தவர்களை கடவுளை நோக்கி அழைத்துச் செல்லத் துடிக்கும் இயேசுவை நோக்கிக் கல்லெறிய ஒரு கும்பல் தயாரானது. ஆனால் இயேசு உண்மைக்குச் சான்றுபகரும் தமது விழிப்பான பணியிலிருந்து விலகிவிடவில்லை. இயேசுவின் உறுதியான நிலைப்பாட்டை முன்னெடுக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம். உண்மைக்குப் புறம்பாக பொய்களும், சந்தர்ப்பவாதங்களும், ஏமாற்றுப் பரப்புரைகளும் ஆதிக்கம் செலுத்துகின்றன. கடவுளின் பெயரால் பிழைப்பு நடத்துபவர்கள் சுயநலவாத முகமூடிகளோடு கொடிபிடிக்கின்றனர். உண்மையை நிலைநாட்ட இயேசுவின் பாதையில் விழிப்படைவோம். ஆற்றோடு அடித்துச் செல்லும் இறந்த மீன்களாக இல்லாமல் இறைவார்த்தைப்படி துணிவோடும் நேர்த்தியோடும் வாழ்வை வளப்படுத்தும் நிலைப்பாடு எடுத்து எதிர்நீச்சலடிப்போம்.

● எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை

## பிற்போடப்பட்டது இசை நாடக விழா

யாழ்ப்பாணம், மார்ச் 20

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இன்று நடத்தவிருந்த பாரம்பரிய கூத்து இசை நாடக விழா பிற்போடப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக அரசின் அறிவுறுத்தலின் அடிப்படையில் பிற்போடப்பட்டுள்ளது என்றும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)




### வலிகாமம் வடக்கில்

## மூன்று வீதிகளுக்கு பெயர்ப்பலகைகள்

யாழ்ப்பாணம், மார்ச் 20

வலிகாமம் வடக்குப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட மல்லாகம் பகுதியில் மூன்று வீதிகளுக்கான புதிய பெயர்ப்பலகைகள்கடந்தபுதன்கிழமைதிறந்துவைக்கப்பட்டன.

கோணற்புலம் வீதி, சோடாக் கொம்பனி வீதி, மில் லேன் ஆகியவற்றின் பெயர்ப்பலகைகளே திறந்துவைக்கப்பட்டன. தமிழ் மக்கள் கூட்டணியின் வலிகாமம் வடக்குப் பிரதேசசபை உறுப்பினர் பெ.தனராஜ் மற்றும் உறுப்பினர் சசிதரன் ஆகியோரின் முயற்சியில், தன்னார்வ அமைப்புகளின் நிதி அனுசரணையுடன் இந்தப் பெயர்ப்பலகைகள் நிர்மாணிக்கப்பட்டன.

நிகழ்வில் வலிகாமம் வடக்குப் பிரதேசசபையின் தவிசாளர் சோ. சுகிர்தன் கலந்துகொண்டு பெயர்ப்பலகைகளைத் திறந்துவைத்தார். சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன், வலிகாமம்வடக்குப்பிரதேசசபையின் செயலாளர் சிவகுமாரன் சிவானந்தன் உட்படப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ச-66,159)

## நீரில் மூழ்கி சிறுவன் சாவு

கொழும்பு, மார்ச் 20

ஹபராதுவ பகுதியில் கடலில் மூழ்கி சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.


குறித்த சிறுவன் தனது நண்பர்களுடன் இணைந்து கடலில் சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## செல்லப்பா சுவாமி குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 20

நல்லூர்த் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் 111ஆவது வருடாந்த குருபூசை நிகழ்வு நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றையதினம் காலை 8 மணிக்கு அபிஷேக ஆராதனை இடம்பெறும். தொடர்ந்து, திருமுறை நற்சிந்தனை ஓதப்பட்டு, நண்பகல் 1 மணிக்கு நல்லூர்த் தேரடியில் பூஜை வழிபாடுகளும் இடம்பெறவுள்ளன. (ச-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை


## விசாரணைகளும் விரிசலும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் சுதந்திர தினத்தன்று தேசியக்கொடியைக் கீழிறக்கி கறுப்புக்கொடி ஏற்றிய விவகாரத்தில், பல்கலைக்கழக மாணவர்கள் மூவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளமை ஜனநாயக விழுமியங்கள் மீதான கேள்விக்குறியை ஏற்படுத்தியுள்ளது. சுதந்திரம் கிடைத்து ஏழு தசாப்தங்களைக் கடந்த பின்னரும், இந்த நாட்டின் ஒரு தரப்பு மக்கள் ஏன் அந்த நாளைத் தங்களுக்குரியதாகக் கருதவில்லை? ஏன் அவர்கள் அதனை ஒரு 'கரிநாளாக' அறிவித்துப் போராடுகிறார்கள்? என்ற அடிப்படை வினாவுக்குப் பதில்தேட முற்படாமல், அந்த வலியை வெளிப்படுத்திய மாணவர்கள் மீது 'இறைமைக்கு குந்தகம் விளைவித்தல்' எனும் சட்டப்போர்வைக்குள் அச்சுறுத்துவதும், விசாரிப்பதும், தண்டிப்பதும் ஆரோக்கியமானவையல்ல.

மாணவர்கள் ஒரு சமூகத்தின் மனச்சாட்சிக்கு ஒப்பானவர்கள். அவர்களுக்குத் தங்கள் அரசியல் அபிலாஷைகளை, ஏமாற்றங்களை, தீர்க்கப்படாத இனப்பிரச்சினையினால் ஏற்படும் வலிகளை வெளிப்படுத்த முழு உரிமை உண்டு. ஒரு ஜனநாயக நாட்டில் கறுப்புக்கொடி என்பது வெறுப்பின் அடையாளம் அல்ல; அது ஒரு தீர்க்கப்படாத கோரிக்கையின், நீதிக் கோரிக்கைக்கான ஒரு துயரின் வடிவம். மாணவர்களை விசாரணை வளையத்திற்குள் கொண்டு வந்து, அவர்களைத் தண்டிப்பதன் மூலம் அவர்களின் மனங்களில் உறைந்துள்ள அதிருப்தியை ஒருபோதும் அகற்றிவிட முடியாது. மாறாக, இத்தகைய அச்சுறுத்தல்கள் எதிர்காலத் தலைமுறையினரைத் தேசத்தின் நீரோட்டத்திலிருந்து இன்னும் அந்நியப்படுத்தவே வழிவகுக்கும்.

இதில் வேடிக்கையான விடயம் என்னவென்றால், இன்று ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தங்களின் அரசியல் பயணத்தில் எண்ணற்ற கறுப்புக்கொடிப் போராட்டங்களையும், வீதிப் போராட்டங்களையும் முன்னெடுத்து வந்த ஒரு தரப்பாகும். போராட்டங்களின் வலிமையையும் அதன் பின்னால்இருக்கும்நியாயங்களையும்நன்குணர்ந்த ஒரு தலைமை, இன்று அதே கறுப்புக்கொடி விவகாரத்துக்காக மாணவர்களை விசாரணைக்கு அழைப்பதைக் கண்டு மக்கள் ஆச்சரியமடையத்தானே செய்வார்கள். அடக்குமுறைகள் மூலம் ஒரு தேசத்தின் இறைமையைப் பாதுகாத்துவிடலாம் என்பது கடந்த கால ஆட்சியாளர்களின் தோல்வியுற்ற கனவு. அந்தத் தவறை தற்போதைய அரசாங்கமும் தொடரக்கூடாது.

இறைமை என்பது வெறும் கொடியிலோ அல்லது நிலப்பரப்பிலோ மட்டும் இல்லை; அது அந்த நாட்டு மக்களின் இதயங்களில் இருக்கவேண்டும். தமிழர்களுக்கான அரசியல் தீர்வு எட்டப்படாத வரை, வடக்கு-கிழக்கில் இத்தகைய எதிர்ப்புணர்வுகள் எழுவது தவிர்க்கமுடியாதது. எனவே, மாணவர்களை அச்சுறுத்துவதை விடுத்து, அவர்கள் கறுப்புக்கொடி ஏந்தியதற்கான மூல காரணத்தைக் கண்டறிந்து, அதற்கு அரசியல் ரீதியான தீர்வை வழங்குவதே ஒரு முதிர்ச்சியடைந்த அரசாங்கத்திற்கு அழகாகும். விசாரணைக்கூண்டுகள் தீர்வைத் தந்துவிடாது. இதயங்களை வெல்லும் இணக்கப்பாடே தேசத்தை ஒன்றிணைக்கும்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






### பொய்யாமொழி

**என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்**

**பொருள்:** எலும்பு இல்லாத உடம்போடு வாழும் புழுவை வெயில் காய்ந்து வருத்துவதுபோல், அன்பு இல்லாத உயிரை அறம் வருத்தும்.



## ஈ-பணப்பரிமாற்றம் தீவிரக் கண்காணிப்பு

**கொழும்பு, மார்ச் 20**

**இலத்திரனியல் பணப்பரிமாற்ற முறைகளைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான விசேட திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேயபால சமர்ப்பித்த முன்மொழிவின் அடிப்படையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கையடக்கத் தொலைபேசி மூலமான பணப்பரிமாற்றங்கள் இனி தீவிரக் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படும்.
ஏற்கனவே நியமிக்கப்பட்ட விசேட குழுவின் பரிந்துரைகளுக்கமைய, சந்தேகத்துக்கிடமான பணப்பரிமாற்றங்கள் முடக்கப்படும். குற்றவாளிகளுக்கு எதிராகக் கடுமையான சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படும். சாதாரண பொதுமக்கள் தமது அன்றாடத் தேவைகளுக்காக இந்தச் சேவைகளைப் பயன்படுத்துவதில் எவ்விதத் தடையுமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## துப்பாக்கிகளுடன் இளைஞர் கைது

கொழும்பு, மார்ச் 20
கல்கிஸ்ஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பி. குணவர்தன மாவத்தைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது, இரண்டு துப்பாக்கிகள் மற்றும் பெருமளவிலான தோட்டாக்களுடன் 18 வயதுடைய இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபரிடமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட பிஸ்டல் ரக துப்பாக்கி, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, ரி-56 ரக தோட்டா மற்றும் 30 ரி-56 ரக தோட்டாக்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.
சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்கிஸ்ஸை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ச-இ)

## சட்டவிரோத சிகரெட் கடத்தல் முறியடிப்பு

சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட 57 இலட்சம் ரூபாய் பெறுமதியான சிகரெட் தொகையை, சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வர முயன்ற இரண்டு சீன நாட்டுப் பெண் வர்த்தகர்கள் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமானநிலைய சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அவர்களின் பயணப் பொதிகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த சீனத் தயாரிப்பு 38 ஆயிரம் சிகரெட்டுகள் அடங்கிய 190 பெட்டிகள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-இ)

## ராகம துப்பாக்கிச்சூடு; சந்தேகநபர் கைது!

கொழும்பு, மார்ச் 20
ராகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த 2025ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுக் கொலைச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த பிரதான துப்பாக்கிதாரி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மாதம்பே பகுதியைச் சேர்ந்த 30 வயதுடையவர் என்பது தெரியவந்துள்ளது. (ச-இ)

## 350 கிலோவுக்கும் அதிக கேரளக்கஞ்சா பறிமுதல்

கொழும்பு, மார்ச் 20
லுணுகம்வெஹெர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெவ்ரம்வெஹெர பகுதியில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையில் 378 கிலோவுக்கும் அதிகமான கேரளக் கஞ்சாவுடன் இரு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
தங்கல்ல குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கடந்த திங்கட்கிழமை இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.
லொறி ஒன்றில் கடத்தப்பட்ட 27 கிலோ 161 கிராம் உலர்ந்த கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன், லொறியில் பயணித்த இருவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் மொனராகலை கஹம்பான பகுதியில் உள்ள ஒரு சேனைப்பகுதியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த மேலும் 350 கிலோ 975 கிராம் கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (எ-இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளங்கள் சுரண்டப்படுகின்றன அபிவிருத்திகளோ எட்டாக்கனி!



## மன்னார் ஆயர் அதிருப்தி

**மன்னார், மார்ச் 20**


**மன்னார் மாவட்டத்தின் இயற்கை வளங்கள் மீது முழு உலகினதும் பார்வை படிந்துள்ள போதிலும், மாவட்டத்தின் கல்வி மற்றும் அடிப்படை அபிவிருத்திகள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுகின்றன என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப் பிரகாசம் ஆண்டகை கவலை வெளியிட்டுள்ளார்.**

மன்னார் மாவட்டப் பிரஜைகள் குழுவின் பணிமனையில் அதன் தலைவர் அருட்பணி மாக்ஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது- மன்னாரில் அபரிமிதமான வளங்கள் இருப்பதாகக் கூறி இன்று முழு உலகமே இந்த மண்ணைத் திரும்பிப் பார்க்கிறது. பல தரப்பினரும் இங்குள்ள வளங்களைச் சுரண்டுவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

இவ்வளவு வளங்கள் இருந்தும், மன்னாரில் ஒரு பல்கலைக்கழகம் கூட இல்லாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது. எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ள மக்கள் மற்றும் அரசியல்வாதிகள் மத்தியில் ஒற்றுமை அவசியம் . சிறு சிறு சலுகைகளுக்காக எமது உரிமைகளையும் எதிர்கால சந்ததியினரின் நலன்களையும் அர்ப்பணிக்கக்கூடாது. எமது அரசியல்வாதிகளிடம் ஒற்றுமை இல்லாததாலேயே வெளியார் எம்மைப் பிரித்து ஆளுகின்றனர். இதனால் நாம் பல வீனமடைந்து வருகிறோம்.

இலங்கையில் வேறு எந்த மாவட்டமும் சந்திக்காத பயங்கரமான ஆபத்துகளை மன்னார் இனிவரும் காலங்களில் சந்திக்கப்போகிறது. எமது மண்ணையும் மக்களின் வாழ்வாதாரத்தையும் காப்பாற்ற வேண்டிய வரலாற்றுப் பொறுப்பு புத்திஜீவிகளுக்கும் பொது அமைப்புகளுக்கும் உண்டு - என்றார். (ச-60)



# பாடசாலை வளாகங்களில் மதப் பிரசாரத்துக்கு தடை!

## வடக்கு ஆளுநர் பணிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 20

பாடசாலை வளாகங்களுக்குள் வெளிநபர்களோ அல்லது தனியார் அமைப்புகளோ நேரடியாகச் சென்று மத நூல்களை விநியோகிக்கும் நடைமுறை முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும் என ஆளுநர் பணித்துள்ளார்.

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் மாணவர்களுக்குப் பைபிள் விநியோகிக்கப்படுவது தொடர்பாக அண்மைய நாள்களாக நிலவி வந்த சர்ச்சைகளைக் கருத்திற்கொண்டு, அவர் இந்த நிர்வாக நடைமுறைகளை அறிவித்துள்ளார். இதுதொடர்பாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வை. ஜெயச்சந்திரனுக்கு விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களில், பைபிள்களை விநியோகிக்க விரும்பும் தொண்டு நிறுவனம், அவற்றை நேரடியாகப் பாடசாலைகளுக்குக் கொண்டு செல்லாமல் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்திடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கவேண்டும். இவ்வாறு ஒப்படைக்கப்படும் நூல்கள், கிறிஸ்தவ பாடத்துக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்படவேண்டும்.

அந்த நூல்கள் அவசியமான மற்றும் கிறிஸ்தவ சமயப் பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கு மாத்திரம் வழங்கப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்யவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது (ச-66)

# பரு. மருத்துவமனை வீதியில் கனரக வாகனத்தால் நெருக்கடி

## நோயாளிகள் அவதி

யாழ்ப்பாணம், மார்ச் 20

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை வீதியூடாகத் தடை விதிக்கப்பட்ட நிலையிலும் கனரக வாகனங்கள் தொடர்ந்து பயணிப்பதன் காரணமாக, அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசலும் விபத்து அச்சமும் ஏற்பட்டுள்ளதாகப் பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பருத்தித்துறை பிரதேசசபை எல்லைக்குட்பட்ட இந்த வீதியில், கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு ஏற்கனவே தடை விதிக்கப்பட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இருப்பினும், தடையை மீறி வாகனங்கள் பயணிக்கின்றன.

மருத்துவமனை வீதியின் இரு முனைகளிலும் தடை குறித்த அறிவித்தல் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. எனினும் வாகனங்கள் வீதிக்குள்நுழைவதற்கு முன்னதாகவே எச்சரிக்கை செய்யும் வகையில் போதிய தூர இடைவெளியில் அவை வைக்கப்படவில்லை.

இதனால் வெளியூர்களிலிருந்து வரும் கனரக வாகனச் சாரதிகள் தடையை அறியாமலேயே இந்த வீதிக்குள் நுழைந்து விடுகின்றனர். மருத்துவமனை வீதி மிகவும் குறுகியதாகக் காணப்படுவதுடன், பிரதான வீதியிலிருந்து நுழைந்தவுடனேயே விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவின் பிரதான நுழைவாயில் அமைந்துள்ளது.

குறுகிய வீதியில் கனரக வாகனங்கள் நுழையும்போது அம்புலன்ஸ்கள் வெளியேறுவதிலும் பெரும் சிக்கல் ஏற்படுகிறது. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகத் தலையீடு செய்து கனரக வாகனப் போக்குவரத்தை முற்றாகக் கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-100)

# கோட்டைகட்டியகுளம் ம.வித்தி குறைபாடுகள் நேரில் ஆராய்வு

முல்லைத்தீவு, மார்ச் 20

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட கோட்டைகட்டியகுளம் மகா வித்தியாலயத்துக்கு நேரடியாகச்சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், குறித்த பாடசாலையில் காணப்படும் குறைபாடுகள் குறித்து ஆராய்ந்தார்.


பாடசாலையின் ஆசிரியர் பற்றாக்குறை, பாடசாலை வளாகத்திலுள்ள பாதுகாப்பற்ற பழைய கட்டடங்களை அகற்றுதல், பாடசாலைக்கான பாதுகாப்பு வேலி அமைத்தல், வகுப்பறைக் கட்டடங்கள் தேவை, சீரான மலசலகூட வசதியை ஏற்படுத்துதல், மிதிவண்டித் தரிப்பிடம் அமைத்தல், பாடசாலைக்கான போக்குவரத்துச் சீரின்மை, விளையாட்டு உபகரணங்கள் தேவை, வகுப்பறைகளுக்கான தளபாடப் பற்றாக்குறைகள் உள்ளிட்ட பல்வேறு குறைபாடுகள் மற்றும் கோரிக்கைகளை பாடசாலை நிர்வாகத்தி

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 20

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக மகாபாரத தொடர் சொற்பொழிவு இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் ஆசிரியரும், சைவப் புலவருமான இரா.செல்வவடிவேல் கலந்துகொண்டு மகாபாரதம் எனும் தலைப்பில் தொடர் சொற்பொழிவாற்றுவார். (ச-100)



# வடக்கு - கிழக்குத் தன்னாட்சிக்கு ஐக்கியப்பட்ட அரசியலமைப்பு!

## வலியுறுத்துகிறார் சி.வி.விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், மார்ச் 20

இலங்கையின் தற்போதைய ஒற்றையாட்சி முறைமைக்குப் பதிலாக, ஒரு ஐக்கியப்பட்ட அரசியலமைப்பை உருவாக்கி, அதன் மூலம் வடக்கு-கிழக்கு மக்களுக்குத் தன்னாட்சி உரிமையை வழங்கவேண்டும் என முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்ட விசேட அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது- நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேணிக் கொண்டு, அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான புதிய வழிமுறைகளைப் பின்பற்றவேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கையின் முதலாம் பிரிவின் படி, வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்குத் தன்னாட்சி அதிகாரத்தை வழங்கவேண்டும். ஒற்றையாட்சி (Ekiya) என்ற சொல்லாடல் அதிகாரத்தைக் குவிப்பதைக் குறிக்கிறது. அதற்குப் பதிலாக 'ஐக்கியப்பட்ட' (Eksath) என்ற கருத்தியலில் அனைத்து இனங்களின் உரிமைகளும் அங்கீகரிக்கப்படவேண்டும். தமிழ் பேசும் மக்கள் மட்டுமன்றி, நாட்டில் உள்ள ஏனைய சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் இந்த ஐக்கியப்பட்ட அரசியலமைப்பு அமையவேண்டும். அதிகாரப் பகிர்வுடன் கூடிய ஒரு ஐக்கிய இலங்கைக்குள் அனைவரும் சம உரிமையுடன்வாழவேண்டும் - என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இறக்குமதி உணவுப்பொருள்களின் விலைகள் அதிகரிக்கும் அபாயம்!

## வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, மார்ச் 20**

**மத்திய கிழக்கில் தீவிரமடைந்து வரும் போர்ப்பதற்றம் காரணமாக, இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப்பொருள்களின் விலைகள் அதிகரிக்கக்கூடிய அபாயம் காணப்படுவதாக வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
இலங்கையின் பருப்புத் தேவையில் 100 சதவீதமும் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது.
உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயம் நாட்டின் தேவையில் தலா 80 சதவீதமானவை இறக்குமதியையே நம்பியுள்ளன. சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி நிலையால் கப்பல் போக்குவரத்து மற்றும் காப்புறுதிச் செலவுகளை அதிகரித்துள்ளதால் அதன் தாக்கம் உள்நாட்டுச் சந்தையில் எதிரொலிக்க வாய்ப்புள்ளது.
விலை உயர்வு தவிர்க்க முடியாததாகத் தோன்றினாலும், மக்களைப் பாதிப்பிலிருந்து பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகின்றது. சந்தையில் அநியாயமான முறையில் விலைகள் உயர்த்தப்படுவதைத் தடுக்க அரசாங்கம் அனைத்து வழிகளிலும் முயற்சிக்கும்.
நுகர்வோர் பாதிக்கப்படாத வகையில் முறையற்ற விலை உயர்வைக் கட்டுப்படுத்த அரசு தீவிரமான கண்காணிப்பு மற்றும் மேலாண்மை நடவடிக்கைகளை முன்னெடுக்கும்- என்றார். (ச-இ)

# 13 ஐ அன்றே ஏற்றிருந்தால் அழிவைத் தவிர்த்திருக்கலாம்

## கூறுகிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 20
தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் திசை மாறிய போதே 13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாகக் கிடைத்த மாகாண சபை முறைமையை ஏற்றிருந்தால் அழிவுகளையும் இழப்புகளையும் தடுத்திருக்க முடியும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.
யாழ். பல்கலைக்கழக ஜனநாயக ஊழியர் சங்கத்தின் 2026ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு யாழ். திவ்யமஹால் மண்டபத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பகாலச் சூழலில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக உருவான 13 ஆவது திருத்தச் சட்டத்தையும், மாகாணசபை முறைமையையும் பயன்படுத்தி எமது அரசியல் நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும் என்று தான் அன்று முதல் வலியுறுத்தி வருகின்றேன்.
அன்று நான் சொன்ன கருத்துகள் மக்கள் மத்தியில் சரியாகக் கொண்டு செல்லப்படவில்லை. மாறாக வன்முறையுடனான கருத்துகளே வலுவாக முன்னெடுக்கப்பட்டன. இதனை அன்றே ஏற்றிருந்தால் இத்தனை அழிவுகளும் உயிர்ப் பலிகளும் ஏற்பட்டிருக்காது,
மக்களுக்குப் பெற்றுக்கொடுத்த ஒவ்வொன்றையும் நான் ஒருபோதும் சுயநல அரசியலுக்காகச் செய்யவில்லை. அவற்றைக் கடமையாகவே கருதினேன் - என்றார். (ச-27)


# இரு நிறுவனங்களின் சுயநலத்தால் கேபிள் உரிமையாளர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20
இரு நிறுவனங்களின் சுயநலத்தால், தமது தொழில் நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளன என்று கேபிள் தொலைக்காட்சி சேவையை முன்னெடுக்கும் உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளர்.
அகில இலங்கை கேபிள் தொலைக்காட்சி ஒப்பிரேற்றர் சங்கப் பிரதிநிதிகள் இதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது-
சுமார் இரு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கையின் பல பாகங்களிலும் இந்தச் சேவையை முன்னெடுத்து வருகின்றோம். யாழ்ப்பாணத்தில் 110 லிங் ஒப்பரேற்றர்களும், மலையகத்தில் 54 லிங் ஒப்பரேற்றர்களும் உள்ளடங்கலாக 300க்கும் அதிகமானவர்கள் இந்தச் சேவையை முன்னெடுத்து வருகின்றனர். ஆனால் இலங்கையில் இரு நிறுவனங்கள் தவிர்ந்த ஏனையவர்களுக்கு அதற்கான உரிமங்கள் வழங்கப்படவில்லை.
தேசிய தொலைத்தொடர்பு ஆணைக்குழுவிடம் விண்ணப்பங்களைக் கொடுத்தும் அதற்கான தீர்வு கிடைக்கவில்லை. 70 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பணத்தை அனுமதிக்காகப் பெற்றுக்கொண்ட ஆணைக்குழு, இந்த இரு நிறுவனங்களின் அழுத்தங்களால் அனுமதி தர மறுக்கின்றது.
நாம் இந்தச் சேவையை முன்னெடுக்க பல கோடி ரூபா நிதியை முதலீடு செய்துள்ள நிலையில், தற்போது தொழிலும் இல்லை முதலும் இல்லை என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.
இந்த இரு நிறுவனங்களின் பிடியில் சிக்குண் டுள்ள எமது சேவையை மீட்டு எமக்கான நீதியைப் பெற்றுத்தர உரிய தப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றனர். (க-18)



# பாரம் தூக்கியை சீரமைக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 20
பருத்தித்துறை நவீன சந்தைக் கட்டடத்தொகுதியில் செயற்பட்டுவரும் நகரசபையின் மரக்கறிச் சந்தையின் பாரம் தூக்கி சில நாள்களாக பழுதடைந்து காணப்பட்டது. இதையடுத்து நகரபிதா வி.டக்ளஸ் போல், உபதவிசாளர், செயலாளர் மற்றும் நகரசபையின் உறுப்பினர் ஆகியோர் நேரடியாகப் பார்வையிட்டதுடன் நகரசபை ஊழியர்கள் மூலம் சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (எ-41-100)



# சாவகச்சேரி நகருக்கு நவீன மின்விளக்குகள்

யாழ்ப்பாணம், மார்ச் 20
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 25 இலட்சம் ரூபாய் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட அதிநவீன மின்விளக்குகளைப் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
மொத்தம் 160 அதிநவீன மின்விளக்குகள் இதற்காகக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் வ. ஸ்ரீபிரகாஷ் மற்றும் உப தவிசாளர் ஞா. கிசோர் ஆகியோர் இந்தப் பணிகளை ஆரம்பித்துவைத்தனர். (ச-9)



வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் பங்குனித் திங்கள் உற்சவத்தின் சிறப்புப் பூசை வழிபாடுகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டனர். (க-17)



யாழ். மாவட்ட சிக்கனக் கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் கோப்பாய் பிராந்திய சபையின் மகளிர் தின நிகழ்வுகள் சபையின் தலைவர் ந. சிவகுமாரன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. (க-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விலையேற்றத்தால் சட்டத்தை இடைநிறுத்தும் அமெ.

நியூயோர்க், மார்ச் 20
அமெரிக்காவில் விண்ணைத் தொடும் எண்ணெய் மற்றும் எரிபொருள் விலையிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் ஒரு முயற்சியாக, அமெரிக்கக் கப்பல் கட்டும் தொழிலை ஊக்குவிப்பதற்காக உருவாக்கப்பட்ட 'ஜோன்ஸ் சட்டம்' (Jones Act) தற்காலிகமாகத் தளர்த்தப்படுகின்றது என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

1920ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டத்தின்படி, அமெரிக்கத் துறைமுகங்களுக்கு இடையே பொருள்களை ஏற்றிச் செல்ல அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட, அமெரிக்கக் கொடியுடன் கூடிய மற்றும் அமெரிக்கர்களால் இயக்கப்படும் கப்பல்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

இது உள்நாட்டுக் கப்பல் தொழிலைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். வெள்ளை மாளிகையின் ஊடகப்பேச்சாளர் கரோலின் லீவிட் இதுதொடர்பில் தெரிவித்துள்ளதாவது:

இந்தச் சட்டம் அடுத்த 60 நாள்களுக்கு நிறுத்தி வைக்கப்படுகின்றது. எண்ணெய், இயற்கை எரிவாயு, உரம் மற்றும் நிலக்கரி போன்ற அத்தியாவசிய வளங்கள் தடையின்றி விநியோகிக் கப்படும். வெளிநாட்டுக் கப்பல்களையும் உள்நாட்டு விநியோகத்திற்குப் பயன்படுத்துவதன் மூலம் போக்குவரத்துச் செலவைக் குறைத்து, எரிபொருள் விலையைக் கட்டுப்படுத்த முடியும் என அரசாங்கம் நம்புகிறது - என்றார்.

எரிபொருள் விலை அதிகரிப்பால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அதிருப்தியைச் சமாளிக்கவே ட்ரம்ப் நிர்வாகம் இந்த முடிவை எடுத்துள்ளது. ஆயினும் இந்த முடிவால் பெரிய மாற்றம் ஏதும் ஏற்படாது என கடல்சார் அமைப்புகள் தெரிவித்துள்ளன. மசகு எண்ணெயின் உலகளாவிய விலை உயர்வே தற்போதைய விலை அதிகரிப்பிற்குக் காரணம் என்றும், இந்தச் சட்டம் நீக்கப்பட்டாலும் அதன் தாக்கம் மிகக் குறைவாகவே இருக்கும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஏ-இ)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக
மாபிள் பதித்து தரப்படும்.
ஒரு சதுர அடி - 85 ரூபாய்.
நிலம் இழுத்து பதிக்க - 110 ரூபாய்
077 334 1281
(CS/60955) J-1

## மணமகள் தேவை

யாழ் கத்தோலிக்கம் (V) 31 வயதுடைய
வங்கியில் பணிபுரியும் மணமகனுக்கு
பொருத்தமான மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:-
077 899 3671
(CS/60978) J-1

## வீடு வாடகைக்கு உண்டு

நல்லூரில் மாநகர சபைக்கு அண்மையில்
4 அறைகள் கொண்ட குடும்பத்தினர் தங்கக்கூடிய
வீடு வாடகைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு: 077 143 5795
(CS/60016) J-1

## தேடுகிறார்

கச்சாயைச் சேர்ந்த செல்வம்
என்பவர் பரந்தனை சேர்ந்த
மயூராவை தேடுகின்றார்.
தொடர்பு: 076 762 6055
(cr47250) (N-1)

## 21 ஆம் ஆண்டு நினைவலைகள்

"தாய் மடி சுகம் என எல்லோருக்கும் தெரியும்
தந்தையோட மடி எத்தனை தவம் என்று
சிலருக்குத் தான் புரியும் !" என்ற கூற்றுக்கு
இணங்க வாழ்ந்து மறைந்த எமது குடும்ப ஒளி விளக்கின்
**நினைவுத்துளிகள் சில.....**

அன்னை மடியில் 02 . 06 . 1953



அன்னை தவிக்க 10 . 04 . 2005

### அமரர் சங்கரப்பிள்ளை வரதராசா
### (வள்ளல் வரதன்)
(நகரசபை சாவகச்சேரி)

**திதி: பூர்வபக்க துதியை**

உலகில் உயர்ந்த உறவே
தோளில் சுமந்த உயிரே
நல்வழி காட்டும் கரமே
வசந்த வாழ்வளிக்கும் வரமே
விழிகளில் பாசங் கொட்டி
நேர்மையை செயலில் காட்டி
தடைகளை படியாய் மாற்றி
வீரம் விதைத்த நற்குருவே
அன்பை செயல்களில் கூட்டி
அறவழி காட்டிய நாயகனே .....

உம் கைபிடித்த நாட்கள்
எல்லாம் பசுமை நிறைந்தவை
விழாமல் நடப்போமென்ற
நம்பிக்கையில் தனியே விட்டீர்கள்
இன்றும் நாம் விழுந்து எழும்புகையில்
உங்கள் கரங்கள் இல்லையப்பா .....

அப்பா உம் அருமையை
நாம் உணர்ந்தோம்
உம் பிரிவையும்
நாம் உணர்ந்தோம்

நீர் இல்லாத வாழ்க்கையும்
நாம் உணர்ந்தோம்
சொல்லி அழ நீங்கள் இருந்தால்
சோகங்கள் தீர்ந்துவிடும்.

தவறி வந்த அழைப்புக்கள்
எம் அலைபேசியில் எத்தனையோ !
தந்தை என்ற பெயரில் தவறியும்
கூட ஒரு அழைப்பு வர எம்
அப்பா எமக்கில்லையே ......

ஆண்டுகள் ஓடினாலும் ஆறுதல்
பெருகினாலும் அந்த நாளை
நினைத்துப் பார்க்கையில் அருவியாய்
கண்ணில் நீர் ஊற்றுகிறது
அந்த நாள் இன்னும் எங்கள்
வாழ்வில் மறக்க முடியா மனவலி
தந்த நாள்
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

**என்றென்றும் உங்கள் பிரிவால்**
**வாடும்**
**குடும்பத்தினர்**

**சந்நிதி இல்லம்**
**கைதடி கிழக்கு, கைதடி.**
(CS/61017) J-1

## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 23 மவுண்காமல் வீதி. 05 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் செபஸ்ரி பெண் ஆரோக்கியம் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

யக்கோ செபஸ்தி பெண் ஆரோக்கியம் 08.02.1959ம் திகதியிட்டு பிரசித்த சு.இரத்தினசிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 4596ம் இலக்க சீதன உறுதி மூலம் அவிறான அந்தோனிப்பிள்ளை கிறிஸ்தீனம்மா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை அவிறான ஞானப்பிரகாசமும் பெண் பெர்னதேத்தும் 01.12.1976ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு க.க பற்றிக் முகதாவில் 488ம் இலக்க அறுதி உறுதி மூலம் மடுத்தீசு கவிரியேல் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை மடுத்தீசு கவிரியேல் 03.09.1984ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் 5055ம் இலக்க அறுதி உறுதி மூலம் அவுறான் ஞானப்பிரகாசம் கைம்பெண் பெர்னதேத் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை சவரிமுத்து யோசேப் பெண் யேட்றூட்டு 10.03.1993ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் 8792ம் இலக்க சீதன உறுதி மூலம் சவிரியன் கிறிஸ்ரியன் பேணாட் பெண் ஜான்சி என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை ஞானப்பிரகாசம் இம்மனுவல் 07.06.2013ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மு.றெமிடியஸ் முகதாவில் 813ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் கிறிஸ்துராசா பெண் காணிக்கை மரியை என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை யோன் கிறிஸ்துராசா பெண் காணிக்கை மரியை 24.07.2017ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு வீ.கௌதமன் முகதாவில் 337ம் இலக்க சீதன உறுதி மூலம் டொனால் றஜீவ் உம் பெண் கிறிஸ்டில்லா என்பவருக்கும் வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை அந்தோனிப்பிள்ளை செபமாலை 24.11.2017ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சி. இளங்கீரன் ஜெயசித்திரா சிறிதரன் முகதாவில் 8199 ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் செறிங்ரன் யுடிஸ்ரா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை சவிரியான் கிறிஸ்ரியன் பேணாட் மற்றும் கிறிஸ்ரியன் பேணாட் பெண் ஜான்சி 30.01.2019 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயசித்திரா சிறிதரன் முகதாவில் 3601ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் கிறிஸ்தோத்திரம் செறிங்ரன் மற்றும் செறிங்ரன் பெண் யுடிஸ்ரா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை கிறிஸ்தோத்திரம் செறிங்ரன் பெண் யுடிஸ்ரா. டொனால் றஜீல் பெண் கிறிஸ்ரிடா 30.01.2019 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயசித்திரா சிறிதரன் முகதாவில் 3602ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் கிறிஸ்ரியன் பேணாட் மற்றும் ஜான்சி என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை சவிரியான் கிறிஸ்ரியன் பேணாட் மற்றும் பெண் ஜான்சி 01.10.2019 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயசித்திரா சிறிதரன் முகதாவில் 3825ம் இலக்க சீதன உறுதி மூலம் லைனல் பேடினன் கெவின் நீக்கின் பெண் லில்லி கருண்சியா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம். யாழ்ப்பாணமாவட்டம். யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று. கரையூர் இறை. தற்போது குருநகர் இறை. இது யாழ்ப்பாண பிரதேசசெயலக பிரிவு. யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட J/71 ம் இலக்க கிராம அலுவலர் பிரிவில். "குடியிருப்பு" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் அவர்களால் 14.01.2018 திகதி அளந்து விபரித்த 3085ம் இலக்க படத்தின்படி துண்டு-1. துண்டு-2. துண்டு-3 என காட்டப்பட்ட பாகங்கள் குளி ஒன்பது (குளி 09). வீடும் கிணறும்.

**இதற்கெல்லைகள்.-**

| | | |
|---|---|---|
| கிழக்கு | : | மவுண்காமல் றோட் |
| வடக்கு | : | மனோகரன் உம் பெண் கலாவினதும் ஆதனம். |
| மேற்கு | : | இராயப்பு பிரான்சிஸ்சுக்குரிய ஆதனம். |
| தெற்கு | : | காந்தியினதும் பெண நீற்றம்மாவினதும் ஆதனம். |

இதடங்கலும்.


தற்போது இவ்வாதனத்தை லைனல் பேடினன் கெவின் நீக்கின் பெண் லில்லி கருண்சியா தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது லைனல் பேடினன் கெவின் நீக்கின் பெண் லில்லி கருண்சியா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

முதல்வர்.
யாழ் மாநகரசபை.
(cr.47244) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிசக்திக் கட்டமைப்புகள் தாக்குதலுக்கு இலக்காகும்

## ஈரான் எச்சரிக்கை



தெஹ்ரான், மார்ச் 20

சவூதி அரேபியா, கட்டார் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளின் எரிசக்திக் கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்தப்படும் என ஈரான் அரசு எச்சரித்துள்ளது.

ஈரானின் மிகப் பெரிய எரிசக்திக் கட்டமைப்பான சௌத் பார்ஸ் எரிவாயு வயலின் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் வான்வழித் தாக்குதல்கள் நடத்தியுள்ளன. இந்தத் தாக்குதலில், சௌத் பார்ஸ் எரிவாயு வயலிலிருந்த ஒரு எரிவாயுக் கிடங்கு மற்றும் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவை சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் தாக்குதல், மிகவும் ஆபத்தானது எனக் கருதப்படும் நிலையில், கட்டார் உள்ளிட்ட நாடுகள் அதற்குக் கண்டனம் தெரிவித்துள்ளன. இந்தநிலையில், இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகள் தொடர்ந்தால், வளைகுடா நாடுகளில் அமைந்துள்ள எரிசக்திக் கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்தி தகர்க்கப்படும் என ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

சவூதி அரேபியாவின் சம்ரெப் சுத்தகரிப்பு நிலையம் மற்றும் ஜுபைல் பெட்ரோ கெமிக்கல் வளாகம் மீதும், ஐக்கிய அரபு அமீரகத்தின் அல் ஹசன் எரிவாயு வயல் மற்றும் கட்டாரின் எரிசக்திக் கட்டமைப்புகள் மீதும் தாக்குதல் நடத்தப்படும் என ஈரான் அரசு குறிப்பிட்டுள்ளது.

(எ-இ)

## பெயர்மாற்றம்

பாரதி வீதி, சங்கானை என்னும் விலாசத்தில் வசிக்கும் ரவிச்சந்திரன் சுவாசினி ஆகிய நான் எனது பெயரை ரவிச்சந்திரன் சிவாஜினி என்று மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் ரவிச்சந்திரன் சிவாஜினி என்று கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

ரவிச்சந்திரன் சிவாஜினி

## மணிவிழா வாழ்த்து



ஆசிரியர்

திருமதி கலாதேவி திருச்செல்வராசா

20.03.2026

மாணவர் மனங்களில் நிலைபெற்ற ஆசான்
குழந்தைகளுடன் குழந்தையாய்
கள்ளங்கபடமற்ற பேச்சு - என்றும்
எம் மனங்களில்...




சேவை விபரம்

08.04.1998 - 02.07.2000 யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்.
03.07.2000 - 15.05.2002 கோப்பாய் ஆசிரியர் கலாசாலை.
16.05.2002 - 05.02.2010 யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்.
08.02.2010 - 05.02.2017 யா/ விக்னேஸ்வர வித்தியாலயம், கைதடி
06.02.2017 - 20.03.2026 யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்.

*ஆசிரியரின் ஓய்வுகாலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.*


**பாடசாலைச் சமூகம்**

**யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 11 . 1943



மறைவு
17 . 03 . 2026

## பொன்னுத்துரை கனகசேகரம்

மாதனை பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானை சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை கனகசேகரம் கடந்த (17.03.2026) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை அன்னபூரணம் ஆகியோரின் புதல்வனும், இராஜசேகரம் (லண்டன்) அவர்களின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற கோபாலபிள்ளை அழகம்மா ஆகியோரின் பாசமிகு மருமகனும், பிறேமாவதி அவர்களின் அன்புக் கணவரும், ஜெயரூபன் (கனடா), விஜயரூபன் (ஜேர்மனி), கவீந்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரிகா (கனடா), சிந்துஷா (ஜேர்மனி), மதியழகன் (ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அருணிகா, அருணன், ஆருஜன், ஆர்த்திகா, ஆராதனா, பிரித்தா, அஸ்வின், விசாகன், அபிஷனா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற குணரத்தினம், பத்மாவதி, லீலாவதி, புனிதவதி, இராஜரட்ணம், ரேவதி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான லோகேஸ்வரி, பேபி, மற்றும் கணேசலிங்கம், விஜயகாந்தன், காலஞ்சென்ற குணபாலசிங்கம், ஞானசௌந்தரி, சிறிகணேஸ்வரி, சிற்சமூர்த்தி ஆகியோரின் சகலனும், பிருந்தா, கருணா, சுவர்ணா, டயானா, தர்ஷன், பிரஷாந்தி, மீரா, கஜேந்தர், புகதீசன், காலஞ்சென்ற கயந்தி, விமலதாசன், சுகன்யா, சுதர்சன், தனுசியா ஆகியோரின் பெரிய தந்தையும், காலஞ்சென்ற ராஜ்வதன், சதீஸ்வரன், சகானா, லக்ஷிகா, டிவாகர், ஜிவாஸ்கர், டினேஷர் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பொன்னுச்சுவாமி வீதி, சங்கத்தானை சாவகச்சேரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (20.03.2026) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 723 8319**

## கேள்வி அறிவித்தல்
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை - 2026
## நானாட்டான் பிரதேச சபை

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு (Div.PC), நானாட்டான் பிரதேச சபை, நானாட்டான், மன்னார், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகமையுடைய கேள்வியாளர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது.
2. இது தொடர்பான மேலதிக தகவல்களை, நாடளாவிய ரீதியில் பிரசுரிக்கப்பட்ட 2026.03.19 ஆந் திகதிய தினக்குரல் தினசரி பத்திரிகையின் 07 ஆம் பக்கத்தில் பார்வையிடலாம்.
3. மேலும் தலைவர், நானாட்டான் பிரதேசசபை, நானாட்டான் பிரதான அலுவலகத்தில், அல்லது குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பாடல் முறைகள் ஊடாகவோ எம்மை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

| No | Contract No. | Name of the Contract | Estimated civil Cost (LKR in Mn) Without VAT | CIDA Required | | Required Bid Security | | Contract Period days | Bid Validity Date |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Specialty | Grade | Amount (Rs.) | Validity Period | | |
| PSDG 2026 | | | | | | | | | |
| 01 | NP/14/42(6)/PSDG/2026/06 | Improvement of Murunkan Public Play Ground | 3.17 | Building Construction | C9 & above | 32,000.00 | 2026.06.18 | 84 | 2026.05.21 |
| 02 | NP/14/42(6)/PSDG/2026/Maint/01 | Renovation Murunkanpiddi - Murunkan Road | 3.81 | High way Construction | C9 & above | 39,000.00 | 2026.06.18 | 84 | 2026.05.21 |
| 03 | NP/14/42(6)/PSDG/2026/Maint/02 | Renovation Umanagari Achchankulam Road | 2.54 | High way Construction | C9 & above | 26,000.00 | 2026.06.18 | 84 | 2026.05.21 |
| | | | | | | | | | |
| 04 | NP/14/42(6)/PSDG/2026/07 | Purchasing & Fixing of Street Lights at Nanattan PS | 1.58 | Specialty<br>Registered Suppliers | | 16,000.00 | 2026.06.18 | 30 | 2026.05.21 |

- கேள்வி பத்திரம் விநியோகிக்கப்படும் திகதி :- 2026.03.19 –2026.04.01 (9.00 -15.30 வரை பெற்றுக் கொள்ளலாம்)
- கேள்வி பத்திரம் கையளிக்கும் இறுதி திகதி :- 2026.04.02

Chairman,
Divisional Procurement Committee (Div.PC)
Nanattan Pradeshiya Sabha
Nanattan, Mannar.

தொலைபேசி இலக்கம் :- 0232050652
தொலை நகல் இலக்கம் :- 0232051719
மின்னஞ்சல்:-nanattanpsabha@gmail.com

(cr.47251) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை அதிபர் தலைமையில் பாடசாலைமைதானத்தில் இடம்பெற்றது. (ச-17)

## திரையிடலும் நூல் வெளியீடும்



யாழ்ப்பாணம், மார்ச் 20
இணுவில் தர்மசாஸ்தா குருகுலம் தொடர்பான ஆவணப்படம் திரையிடலும் நூல் வெளியீடும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடக் கருத்தரங்க மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடப் பீடாதிபதி பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர். சி. சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (ச-66)

நயினாதீவு பெருங்குளம் மதுரை மீனாட்சி அம்மன் ஆலய மஹோற்சவப் பெருவிழா கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்தும் 11 தினங்கள் காலை. மாலை திருவிழாக்களாக மஹோற்சவப் பெருவிழா நடைபெற்று வருகின்றது. (ச-66)





## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 20
சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கொமர்ஷல் வங்கியின் அணகி மகளிர் வங்கிப் பிரிவால் தொழில் முனைவோருக்கான வழிகாட்டல் கருத்தரங்கு கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் கொமர்ஷல் வங்கியில் நடைபெற்றது .
கருத்தரங்கில் கிளிநொச்சி கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிரதிப் பணிப்பாளர் கா.சசிகரன் மற்றும் யாழ்ப்பாணம் சாகோ கிரியேற்றிவ் அக்கடமி பணிப்பாளர் சி.கஸ்மிகன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர். (ச-159

## அன்னை பூபதி நினைவுநாள் கிளிநொச்சியில் அனுஷ்டிப்பு

கிளிநொச்சி, மார்ச் 20
ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில் அகிம்சை வழியில் போராடித் தன்னுயிரைத் தியாகம் செய்த தியாகத்தாய் அன்னை பூபதியின் 38ஆம் ஆண்டு நினைவுநாளின் ஆரம்பநாள் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் மாவட்டக் காரியாலயமான அறிவகத்தில் உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.
நிகழ்வில் கட்சியின் பிரதேசசபை உறுப்பினர்கள், கட்சியின் முக்கியமான செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (ச-66-113)






பதுளை உடுவரை மேற்பிரிவு தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கின்ற 236 மாணவர்களுக்கு 4 இலட்சத்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் வழங்கப்பட்டுள்ளன. சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று கற்றல் உபகரணங்களை வழங்கினார். (ச-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இஸ்ரேலின் தாக்குதலுக்கு ட்ரம்ப் கடும் விமர்சனம்!

கொழும்பு, மார்ச் 20

ஈரானின் தெற்கு பார்ஸ் இயற்கை எரிவாயு வயல் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலை விமர்சித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். பாரசீக வளைகுடா பிராந்தியத்தில் உள்ள எரிசக்தி நிலையங்கள் மீது ஈரான் நடத்திய தொடர் தாக்குதல்களுக்கு இஸ்ரேலின் இந்த நடவடிக்கையே முக்கியமான காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தத் தாக்குதல் குறித்து அமெரிக்காவிற்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை. அத்துடன் கட்டார் தேசம் எந்த வகையிலும் இதில் தொடர்புபடவில்லை என்பதுடன், இவ்வாறான ஒன்று நடக்கும் என்பதும் அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. துரதிர்ஷ்டவசமாக, ஈரான் இந்த உண்மைகளை அறியாமல் அநியாயமாக கட்டாரின் எல்.என்.ஜி. மையம் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. என்று குறிப்பிட்டுள்ளார். (ஏ-இ)

### அமெ.சிறப்புத்...

டன் தூதுவர் செர்ஜியோ கோர் விசேட சந்திப்புகளை நடத்தவுள்ளார். அத்துடன், சர்வதேச கடற் போக்குவரத்து வழிகளைப் பாதுகாத்தல், துறைமுகங்களின் பாதுகாப்பை உறுதி செய்தல், இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக மற்றும் வணிக உறவுகளை மேம்படுத்துதல், சுதந்திரமான, திறந்த மற்றும் வளமான இந்தோபசுபிக் பிராந்தியத்தை உருவாக்கும் அமெரிக்காவின் மூலோபாயத்திட்டங்களை வலுப்படுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அவர் ஆராயவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ச-இ)

### பல்கலை...

கப்பட்டன. யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுக்கு நேற்றுக் காலை அழைக்கப்பட்ட மூன்று மாணவர்களிடம் சுமார் 4 மணிநேரமாக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அவர்களிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர். பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில், சட்டமா அதிபரின் ஆலோசனைகளை பெற்று அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-26)

### 90,91களில்...

மாதாந்த அமர்வு நேற்று நடைபெற்றது. இதன்போது, வேலணைப் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் 1990, 1991ஆம் ஆண்டுகளில் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களுக்காக பொதுவான நினைவுத் தூபி இதுவரை இல்லை. அத்தகைய நினைவுத் தூபியொன்றை அமைக்க வேண்டும் என்று உறுப்பினர் திருநாவுக்கரசு சிவகுமாரால் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு உறுப்பினர்கள் ஆதரவு வழங்கியதைத் தொடர்ந்து தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. (அ-ம-27)

### நம்பிக்கையில்லாப்...

போது நிலவும் எரிசக்தி நெருக்கடிக்கு, வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடியின் முறையற்றதிட்டமிடல்களே பிரதான காரணம் என்று எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி வந்தன. அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கும் எதிர்க்கட்சிகள் நடவடிக்கைகளை எடுத்திருந்தன. இதையடுத்தே, அமைச்சர் குமார ஜயக்கொடிக்கு எதிராக நேற்று நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணை விவாதத்துக்கு எடுப்பதற்கு சபாநாயகர் தீர்மானித்துள்ளார். இதன்படி, ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி விவாதம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நண்பகல் 11.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை இடம்பெறும் விவாதத்தைத் தொடர்ந்து, வாக்கெடுப்பு நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திசைகாட்டி அரசாங்கத்துக்கு, போதுமான அளவுக்கு நாடாளுமன்றப் பலம் உள்ளது. ஆதலால் இந்தத் தீர்மானம் வெற்றிபெற வாய்ப்பில்லை. எனினும், ஓர் எதிர்ப்பை வெளிப்படுத்தும் நோக்கிலேயே இது கொண்டுவரப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### எரிபொருள்...

பனத்தின் பணிப்பாளர் மயூர நெத்திகுமாரகே மேலும் தெரிவித்ததாவது: நாட்டின் எரிபொருள் கையிருப்பு மேலும் அதிகரித்துள்ளது. ஏப்ரல் மாதம் மத்திய பகுதிவரை எரிபொருள்கள் கையிருப்பில் உள்ளதாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது எரிபொருள்களின் இருப்பு ஏப்ரல் மாதம் இறுதிவரை அதிகரித்துள்ளது.

எரிபொருள் விநியோகத்தில் தற்போது எந்தப் பிரச்சினையும் இல்லை. அத்துடன், கியூ.ஆர். குறியீட்டைப் பெற்றுக் கொள்வதில் எவ்வித தொழில்நுட்பக் கோளாறுகளும் தற்போது இல்லை. அவதானிக்கப்பட்ட சிக்கல்கள் அனைத்தும் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன - என்றார். (அ-ம)

### இராணுவப்...

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு நேற்றுமுன்தினம் இரவுமுதல் இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

நாடெங்கும் நிலவும் எரிபொருள் நெருக்கடியைத் தொடர்ந்து, கடந்த சில நாள்களாக எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்தது. இதையடுத்தே, தற்போது பொலிஸ் பாதுகாப்புக்கு மேலதிகமாக இராணுவப் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது. (அ-ம-17)

### அர்ச்சுனா...

களின் சம்மேளனத்திலும், ஏனைய கமக்காரர் அமைப்புகளிலும் ஊழல் இடம்பெறுவதாக, கடந்த பெப்ரவரி மாதம் 25ஆம் திகதியன்று இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கான ஆதாரத்தை வெளிப்படுத்துமாறு, இரணைமடு கமக்கார அமைப்புகள் கோரியிருந்தன. அத்துடன், விசாரணைக்குத் தயார் என்றும் ஏற்கனவே அறிவித்திருந்தன. இதைத் தொடர்ந்தே, நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனாவின் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் போராட்டத்தை நேற்றையதினம் முன்னெடுத்த விவசாயிகள், தமது போராட்டத்தின் ஒரு பகுதியாக அர்ச்சுனாவின் கொடும்பாவியையும் எரித்தனர். (அ-ம-113)

### அர்ச்சுனா எம்.பி. மீது...

யிலும், அவதூறுகளைப் பரப்பும் நோக்கிலும் செய்திகளையும், பரப்புரைகளையும் மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, மருத்துவர் ஒருவர், தனியார் ஊடகமொன்று, யூடியூப் தளங்கள் உள்ளிட்ட தரப்புகளுக்கு எதிராகவே இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது. (அ-ம-26)

### மரத்துடன்...

வராவார். படுகாயமடைந்த நபர் முதற்கட்ட சிகிச்சைக்குப் பின்னர் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சையின் போதே உயிரிழந்தார் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சடலம் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-19)

### தடையில்லா...

பில், கட்டார் மன்னருடன் ஜனாதிபதி அநுர நேற்றுக் கலந்துரையாடல் நடத்தியுள்ளார். இதன்போதே, மத்திய கிழக்கில் போர்ச் சூழல் விரிவடைந்தாலும், எரிபொருள்கள் தடையில்லாமல் கிடைப்பதை கட்டார் உறுதிப்படுத்தும் என்று மன்னர் அல் தானி வாக்குறுதி வழங்கியுள்ளார்.

அத்துடன், மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் முன்னெடுக்கப்படும் போர் விரிவாக்க நடவடிக்கைகள் தொடர்பில், ஜனாதிபதி அநுர தனது அதிருப்தியையும் கவலையையும் கட்டார் மன்னரிடம் தெரிவித்துள்ளார். (அ-ம-ச)

### விசாரணைகளை...

இலங்கையின் சுதந்திரதினமான பெப்ரவரி மாதம் 4ஆம் திகதியன்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தேசியக் கொடி இறக்கப்பட்டுக் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டிருந்தது. இது 'இலங்கையின் இறையாண்மைக்கு எதிரான குற்றம்' என்ற அடிப்படையில் யாழ். மாவட்டக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் தற்போது விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பல்கலைக்கழக துணைவேந்தர், பதிவாளர் உள்ளிட்டோரிடம் ஏற்கனவே விசாரணைகள் நடத்தப்பட்ட நிலையில், நேற்று மாணவர்கள் சிலரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இதையடுத்தே, இந்த விசாரணைகளைக் கண்டித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை பெரும் போராட்டம் இடம்பெற்றது. மாணவர்களுக்கு ஆதரவாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சிவில் செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோரும் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (அ-ம-26-66)

### சிங்கள...

நேற்றுப் பேரணி இடம்பெற்றுள்ளது. வடக்கு மாகாணத்தில் சிங்கள மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை வெளிப்படுத்தும் நோக்கில், பிக்குகள் சிலரின் தலைமையில் நேற்றுப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணம் ஆரியகுளம் நாக விகாரையில் ஆரம்பமான பேரணி வடமாகாண ஆளுநர் அலுவலகம் வரை முன்னெடுக்கப்பட்டது. இதையடுத்து, ஆளுநரிடம் மனுவொன்று கையளிக்கப்பட்டது.

இந்தப் பேரணியில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்ததாவது:-

78 ஆண்டுகளாக வடக்கில் வாழும் சிங்கள மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை. வடமாகாணத்தில் உள்ள சிங்கள மக்களின் உரிமைகள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. 30 ஆண்டுகளாக இடம்பெற்ற நீண்ட உள்நாட்டுப் போருக்கு முன்பும், போரின் போதும், போரின் பின்னரும் அவர்கள் பல்வேறு இழப்புகளையும் அநீதிகளையும் சந்தித்துள்ளனர். இதுவரை எந்த அரசும் அவர்களுக்கு நிலையான தீர்வுகளை வழங்கவில்லை.

இந்த பிரச்சினைகள் குறித்து பேசப்படும் ஒவ்வொரு முறையும், அவை இனவாதமாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, தேசிய ஒற்றுமைக்கு எதிரானதாகக் கூறி ஒதுக்கப்படுகின்றன. வடக்கு மாகாணத்தில் சிங்கள மக்களுக்கு உள்ள நில எல்லைப் பிரச்சினைகள், மீள்குடியேற்றச் சிக்கல்கள், பௌத்த மத பாரம்பரிய இடங்களின் பாதுகாப்பு, சிங்கள மொழியில் கல்வி பெறுவதில் உள்ள சிரமம், அரச அலுவலகங்களில் சிங்கள பணியாளர்கள் இல்லாமை உள்ளிட்ட பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் - என்றனர். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# திருப்பாடுகளின் நாடகம் 'காவிய நாயகன்' அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

அரை நூற்றாண்டைக் கடந்த வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணம் திருமறைக்கலாமன்றத்தின் வருடாந்தத் திருப்பாடுகளின் நாடகம், இம்முறை 'காவிய நாயகன்' எனும் பெயரில் எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாள்கள் மாலை 6.45 மணிக்கு இல.238 ,பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

இந்த நாடகம் திருமறைக்கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் நீ. மரியசேவியர் அடிகளாரின் எழுத்துருவில் உருவாகியுள்ளது. 2001ஆம் ஆண்டு முதன்முதலாக மேடையேற்றப்பட்ட இந்த நாடகம், தற்போது 6ஆவது தடவையாக மீளவும் மேடையேற்றப்படுகின்றது.

மன்றத்தின் சிரேஷ்ட கலைஞர்களில் ஒருவரான இரத்தினசிங்கம் ஜெயகாந்தன் இம்முறை நெறியாள்கையை மேற்கொண்டுள்ளார். இயேசுக் கிறிஸ்துவின் வாழ்வில் அவர் எதிர்கொண்ட சவால்களையும், போராட்டங்களையும் 'மனிதம்' என்ற தேடலுக்குப் பதிலளிக்கும் வகையில் இந்நாடகம் சித்தரிக்கின்றது.

நவீன அரங்க நுட்பங்கள், பிரமாண்டமான காட்சியமைப்புகள் மற்றும் ஆத்மார்த்தமான இசையுடன் இந்த ஆற்றுகை வடிவமைக்கப்பட்டுள்ளது. அரங்கிலும் அரங்குக்குப் பின்னணியிலுமாக 200க்கும் மேற்பட்ட கலைஞர்களின் பங்கேற்புடன் 'காவிய நாயகன்' அரங்கேறத் தயாராகின்றது. (ச)

## சிறுவர் சந்தை

*யாழ்ப்பாணம்,மார்ச் 20*

*மயிலிட்டி திருப்பூர் ஒன்றிய முன்பள்ளியின் முதலாவது சிறுவர் சந்தை நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளிவில் மயிலிட்டி திருப்பூர் ஒன்றிய சனசமூக நிலைய வளாகத்தில் இடம் பெறவுள்ளது. (ச-100)*



# கடினப்பந்து துடுப்பாட்டத்தில் நடேஸ்வராக் கல்லூரி வெற்றி!

யாழ்ப்பாணம், மார்ச் 20

19 வயதுக்குட்பட்ட கடினப்பந்து துடுப்பாட்டப் போட்டியில் கண்டி விக்கிரமபாகு தேசிய பாடசாலை அணியை வீழ்த்தி யா/நடேஸ்வராக் கல்லூரி பெண்கள் அணி வெற்றி பெற்றுள்ளது.

கண்டி கம்பொலவில் அமைந்துள்ள விக்கிரமபாகு தேசியப்பாடசாலை விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை குறித்த போட்டி இடம்பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய விக்கிரமபாகு தேசிய பாடசாலை பெண்கள் அணி 16.4 பந்துப்பரிமாற்றங்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

தொடர்ந்து 72 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய நடேஸ்வராக் கல்லூரி அணி 19.2 பந்துப்பரிமாற்றங்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 72 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டதுடன் 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (எ-41-100)

# கப்பல் மீது ஏவுகணை தாக்குதல்

நியூயோர்க், மார்ச் 20

கட்டார், ராஸ்லபான்பிரதேசத்துக்கு அருகில் நடுக்கடலில் பயணித்துக்கொண்டிருந்த கப்பல் ஒன்றின் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று ஐக்கிய இராச்சிய கடல்சார் வர்த்தக நடவடிக்கைகள் அமைப்பு தெரிவித்துள்ளது. தாக்குதலுக்கு உள்ளான கப்பலில் பயணித்த அனைவரும் பாதுகாப்பாக இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (எ-இ)


## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 10 . 07 . 1950 | 19 . 03 . 2026 |



## அம்புறோஸ் றொபேட்பிறன்சிக்கோ

சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமகவும் கொண்ட அம்புறோஸ் றொபேட்பிறன்சிக்கோ அவர்கள் நேற்று (19.03.2026) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்புறோஸ்-செபமாலை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அருளப்பு-நேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், லில்லி திரேசா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான யேசுதாசன், எட்பீசம்மா, ஸ்கூர்மன் அல்பிறட் மற்றும் மரியரட்ணம் (பிரான்ஸ்), பெனிடிற் பெர்னான்டோ, மேரி திரேசா, யுஸ்ரினா மேரி அலங்காரம், டெல்சியா செல்வரட்ணம், செபஸ்ரியன் (பிரான்ஸ்), அல்பிறட் பீரிஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் அன்ரோநிசா, டெஸ்மன் லோறன்ஸ் (LOLC சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோமஸ் றொய்ஸ் (Area Sales Manager, Nippon Paint Lanka (Pvt) Ltd.) மேசியா ஆகியோரின் அன்பு மாமனாரும், ரெசர் றெக்ஸ் (மாணவன்- புனித பத்திரிசியார் கல்லூரி), ஒபீலியா ரெசர் (Aston பாலர் பாடசாலை), வோஸ்மிகா (மாணவி- உடுவில் மகளிர் கல்லூரி) அல்டோன்சா (Aston பாலர் பாடசாலை) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 20.03.2026 வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச்சென்று திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித அந்தோனியார் சேமக்காலை யில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

யஸ்தஸ் சின்னப்பு வீதி
(டாக். சுப்பிரமணியம் வீதி,
1ம் ஒழுங்கை), சுன்னாகம்.

டெஸ்மன் லோறன்ஸ் (மகன்) - 0770824974
கோமஸ் றொய்ஸ் (மருமகன்) - 0773140409

(CS 31475)A




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org